மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம் தொழில் துறையில் மிகமிகப் பின் தங்கியதாக இருந்துகொண்டு வருகிறது. எனவே இனிமேலாவது இத்தகைய ஒரு தையல் மிஷின் செய்யக்கூடிய சாதாரணத் தொழிற்சாலையையாவது அங்கு நிறுவ அரசுத்துறையில் இல்லாவிட்டாலும் கூட்டுறவுத் துறையிலாவது நிறுவ முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தையல் மிஷினைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டில் சென்னையில் ஏற்கனவே இரண்டு தொழிற்சாலைகள் அனுமதி பெற்றிருக்கின்றன.

முகவை மாவட்ட வேலை வாய்ப்பகம்

* 313 வினா—திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971-ல் முகவை மாவட்ட வேலை வாய்ப்பு நிலையத்தில் பதிவு செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 21,515 பேர்.

Closed textile mills in Madurai district.

* 314 Q.—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is a proposal to re-open the three closed Textile Mills in Madurai district, namely Raja Mills, Kothandaram Spinning Mills and Murugan Mills; and

(b) if so, the steps taken in this regard?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.